# கோயம்புத்தூர் மாநகராட்சி

அனுப்புநர்

திரு .ஆர். வெங்கடாசலம்,
மேயர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்- 641 001

பெறுநர்

மதிப்பிற்குரிய துணை மேயர் அவர்கள்,
ஆளுங்கட்சி / எதிர்கட்சித் தலைவர்கள்,
வார்டு குழுத் தலைவர்கள்,
நியமனக்குழு உறுப்பினர்,
நிலைக்குழு தலைவர்கள் மற்றும்
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

சட்டமன்ற உறுப்பினர்கள்,
(கோவை கிழக்கு, கோவை மேற்கு,
சிங்காநல்லூர், தொண்டாமுத்தூர்
மற்றும் பேரூர் சட்டமன்ற தொகுதிகள்),

பாராளுமன்ற உறுப்பினர்கள்,
(கோவை மற்றும் பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

ந.க.எண் : **11915 / 2009 /** எம்சி. **8** நாள் : **23.10.09**

அய்யா /அம்மா,

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக்கூட்டம் - நிகழ்ச்சி நிரல் அனுப்புவது - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் மாமன்ற சாதாரணக்கூட்டம் வருகின்ற **30.10.2009** வெள்ளிக்கிழமை காலை **10.30** மணிக்கு வணக்கத்திற்குரிய மேயர் அவர்கள் தலைமையில் விக்டோரியா ஹால் மாமன்றக் கூடத்தில் நடைபெற உள்ளது. அதுசமயம் அனைத்து மாமன்ற உறுப்பினர்களும் அனைத்து துறைத்தலைமை அலுவலர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இக்கூட்டத்திற்கான நிகழ்ச்சிநிரல் இத்துடன் இணைத்து அனுப்பப்படுகிறது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

இணைப்பு : 1

/ உண்மைநகல் / உத்திரவின்படி/

23.10.09
மாமன்ற செயலாளர்

நகல் :

துணை ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் அவர்கள், கோயம்புத்தூர் மாநகராட்சி

## மாமன்ற சாதாரணக் கூட்டம்

## அக்டோபர் 2009

## நிகழ்ச்சி நிரல்

| பொருளடக்கம் | |
|---|---|
| அ) திருக்குறள் வாசித்து மன்ற நிகழ்ச்சியை துவக்குதல்<br>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி | |
| வ.எண் | இ). தீர்மானத்திற்குரிய பொருள் |
| 1 | கல்விப் பிரிவு - கிழக்கு மண்டலம் -கிருஷ்ணாபுரம் மாநகராட்சி ஆரம்பப்பள்ளி - நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது – அரசு ஆணை வெளியிடப்பட்டது – மாமன்றம் பதிவு செய்தல் -தொடர்பாக. |
| 2 | கல்விப் பிரிவு - கிழக்கு மண்டலம் -எஸ்.ஐ.ஹெச்.எஸ்.காலனி மாநகராட்சி ஆரம்பப்பள்ளி - நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தப்பட்டது – அரசு ஆணை வெளியிடப்பட்டது – மாமன்றம் பதிவு செய்தல் - தொடர்பாக. |
| 3 | கல்விப் பிரிவு - மாநகராட்சி பள்ளி மாணவ மாணவிகள்- யோகா பயிற்சி மேற்கொள்ளுதல் - பள்ளிகளுக்கு தரைவிரிப்புகள் வாங்கி வழங்குதல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 4 | பொறியியல் பிரிவு - 5 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் -தொடர்பாக |
| 5 | பொறியியல் பிரிவு - 11 அபிவிருத்திப் பணிகள் செய்தல் - மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக. |
| 6 | பணியமைப்பு - திருமதி செ. கிருபா ஆனந்தி, பலநோக்கு சுகாதார பணியாளர் - ஈரோடு மாநகராட்சிக்கு மாறுதல் கோருதல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 7 | பணியமைப்பு - திருமதி பி. சுதா, பலநோக்கு சுகாதார பணியாளர் - கோவில்பட்டி நகராட்சிக்கு மாறுதல் கோருதல் -மாமன்ற அனுமதி கோருதல் - தொடர்பாக |
| 8 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகள் - உரிமக்காலம் நீடிப்பு செய்தல் -மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 9 | வருவாய் பிரிவு - கிழக்கு மண்டலம் - வரதராஜபுரம் மாநகராட்சி திருமண மண்டபம் - உரிமம் நீக்கம் செய்து மாநகராட்சியே நடத்துதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் - தொடர்பாக. |
| 10 | நகரமைப்பு - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 26- ரேஸ்கோர்ஸ் பகுதி- இந்திய விமானப்படை நிர்வாக கல்லூரி முன்புறம் நடைபாதை மேம்பாலம் அமைத்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 11 | வருவாய் பிரிவு - தெற்கு மண்டலம் - உக்கடம் லாரிப்பேட்டை மொத்த மீன்விற்பனை அங்காடி - தமிழ்நாடு மீன்வளர்ச்சிக் கழகத்திற்கு குத்தகைக்கு விடுதல் - அரசுக்கு பரிந்துரை செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல்-தொடர்பாக. |
| 12 | பொறியியல் பிரிவு - இரயில்வே மேம்பாலங்கள் கட்டுதல் - மாநில நெடுஞ்சாலைத்துறைக்கு நிலம் ஒப்படைப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 13 | பொறியியல் பிரிவு - மேற்கு மண்டலம் - வார்டு எண் 48 – ரங்கே கவுடர் சாலை – புதியதாக மலர் அங்காடி கட்டுதல் பணி – திருத்திய நிர்வாக அனுமதி கோருதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக |
| 14 | நகரமைப்பு - தெற்கு மண்டலம் - வார்டு எண் 54 – தெற்கு உக்கடம் பகுதியில் உள்ள லாரிப்பேட்டையை வெள்ளலூர் பகுதிக்கு மாற்றுதல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |
| 15 | நகரமைப்பு -புல உதவியாளர்கள் - பணி நீடிப்பு செய்தல் - மாமன்ற ஒப்புதல் கோருதல் -தொடர்பாக. |

நன்றியுரை

**அ) <u>திருக்குறள்</u>**

**யாகாவா ராயினும் நாகாக்க காவாக்காற்**
**சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.**

**(குறள் -127)**

**<u>விளக்கம்</u>**

**ஒருவர் எதைக் காத்திட முடியாவிட்டாலும் நாவையாவது அடக்கிக் காத்திட வேண்டும். இல்லையேல் அவர் சொன்ன சொல்லே அவர் துன்பத்துக்குக் காரணமாகிவிடும்.**

**திருவள்ளுவர்.**

---

**<u>ஆ) தீண்டாமை பழக்கத்தை கைவிட மேற்கொள்ளும் உறுதிமொழி</u>**

**இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகனாகிய/குடிமகளாகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் சமூக வேற்றுமையை, மனம்,வாக்கு,செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதி அளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சாதி, சமய வேறுபாடற்ற சமத்துவ சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும். மேலும், தீண்டத்தகாதவர்கள் என்ற கொடுமைக்கு ஆளாகியுள்ள மக்களிடையே காணப்படும் தீண்டாமை உணர்வையும் போக்குவது நமது சமூகக் கடமை என்பதையும் உணர்ந்து செயல்படுவேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப் பற்றிற்கும் இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமார உறுதியளிக்கிறேன்.**

## பொருள் எண் 1

பொருள் - மாநகராட்சி கிருஷ்ணாபுரம் ஆரம்பப்பள்ளி -நடுநிலைப்பள்ளியாக தகுதி உயர்த்தி அரசாணை வெளியிடப்பட்டது –கல்விக்குழுவின் ஒப்புதலுடன் மன்றப்பொருள் ஒப்புதலுக்கு.

பார்வை - அரசாணை (நிலை) எண் 216 நாள் 21.8.09

-------------

மாநகராட்சி கிருஷ்ணாபுரம் ஆரம்பப் பள்ளியை நடுநிலைப்பள்ளியாக தரம் உயர்த்தி அரசாணை (நிலை) எண் 216 நாள் 21.8.09-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காண் அரசாணை கல்வி நிலைக்குழுவின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்பட்டு, கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மான எண் 2 நாள் 8.10.09-ன்படி மாமன்ற பொருள் பார்வைக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண் 4356/09/K2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 97 நாள் : 30.10.2009**

அரசு ஆணை (நிலை) எண். 216 பள்ளிக் கல்வித் (சி2) துறை நாள் 21.08.2009 பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 2

கோவை மாநகராட்சி எஸ்.ஐ.ஹெச்.எஸ். காலனி ஆரம்பப்பள்ளியை நடுநிலைப்பள்ளியாக தகுதி உயர்த்தி அரசாணை நிலை எண் 216 நாள் 21.8.09-ல் வெளியிடப்பட்டுள்ளது.

மேற்காண் பள்ளியை நடுநிலைப் பள்ளியாக தகுதி உயர்த்தி உத்திரவிடப்பட்ட அரசாணை கல்வி நிலைக்குழுவின் பார்வைக்காகவும், பதிவுக்காகவும் வைக்கப்பட்டு, தீர்மான எண் 3 நாள் 8.10.09-ன்படி பதிவு செய்து பார்வைக்காக மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - மாமன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

ந.க.எண் 1449/08/K2

**மாநகர மன்ற தீர்மானம் எண் 98 நாள் : 30.10.2009**

அரசு ஆணை (நிலை) எண். 216 பள்ளிக் கல்வித் (சி2) துறை நாள் 21.08.2009 பதிவு செய்யப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 3

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி பள்ளி மாணவ மாணவியர்களுக்கு யோகா உடற்பயிற்சி மேற்கொள்ள தரைவிரிப்புகள் வழங்குதல் - சார்பு

----------------

கோவை மாநகராட்சி பள்ளி மாணவ மாணவியர்க்கு யோகா பயிற்சிகள் பள்ளிகளில் வழங்கப்பட்டுள்ளது. எனவே யோகா பயிற்சி மேற்கொள்ளும் மாணவ மாணவியர் உபயோகத்திற்கு தரைவிரிப்புகள் (Carpet 6'x2') கீழ்காண் எண்ணிக்கையில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| வ.எண் | பள்ளி வகை | எண்ணிக்கை | ஒரு பள்ளிக்கு வழங்கப்பட வேண்டிய தரைவிரிப்பு எண்ணிக்கை | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | மேல்நிலைப்பள்ளிகள் | 16 | 100 | 1600 |
| 2 | உயர்நிலைப்பள்ளிகள் | 10 | 50 | 500 |
| 3 | சிறப்புப் பள்ளி | 1 | 50 | 50 |
| 4 | நடுநிலைப்பள்ளிகள் | 13 | 25 | 325 |
| 5 | ஆரம்பப்பள்ளிகள் | 45 | 25 | 1125 |
| மொத்தம் | | 85 | | 3600 |

மேற்படி தேவைப்படும் 3600 எண்ணிக்கையிலான தரைவிரிப்புகள் (Carpets) வாங்கி வழங்கவும், செலவினத் தொகையை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் கல்வி பூங்காக்கள் மற்றும் விளையாட்டு மைதானங்கள் குழு தீர்மான எண் 4 நாள் 8.10.2009-ன்படி ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

மாநகராட்சி பள்ளி மாணவ, மாணவியர் பயன்பாட்டிற்கென மேற்படி தரைவிரிப்புகள் வாங்கி வழங்கவும், அதற்கான செலவினத் தொகையை மாநகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்காக மாமன்ற பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - அனுமதிக்கலாம். ந.க.எண் 9349/09/K9

மாநகர மன்ற தீர்மானம் எண் 99 நாள் : 30.10.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 4

கோவை மாநகராட்சி பகுதியில் கீழ்கண்டுள்ள அபிவிருத்திப்பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 01-09-2009 அன்று பரிசீலனை செய்து கீழ்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| வணக்கத்திற்குரிய மேயர் நிதி | | | | | | |
| 1 | 1940 / 09 / எம்.டி.4 | தெற்கு மண்டலம், வார்டு எண்.28 சத்தியமூர்த்தி சாலை பூங்காவிற்கு அபிவிருத்தி பணிகள் செய்தல் | 10.00 | 28-08-09 மூன்றாம் அழைப்பு | திருமதி. பி. லட்சுமி | 4.72 அதிகம் |
| சட்டமன்ற உறுப்பினர் நிதி ஒதுக்கீடு | | | | | | |
| 2 | 2542 / 09 / எம்.டி.3 | வடக்கு மண்டலம், வார்டு எண். 32-ல் டாடாபாத் 7-வது வீதியில் தார் தளம் புதுப்பித்தல் | 7.50 | 24-07-2009 இரண்டாம் அழைப்பு | திரு. கே. நடராஜன் | 4.28 அதிகம் |
| 3 | 2467/ 09 / எம்.டி.3 | வடக்கு மண்டலம், வார்டு. எண். 29 அண்ணபூர்ணா லே அவுட்டில் தார் தளம் புதுப்பித்தல் | 9.00 | 28-08-09 இரண்டாம் அழைப்பு | திரு.ஆர். கிருஷ்ணசாமி | 4.41 அதிகம் |
| 4 | 6017/ 09 / எம்.டி.3 | கிழக்கு மண்டலம், வார்டு.எண்.23 திருவள்ளுவர் நகர் பிரதான மற்றும் குறுக்கு சாலைக்கு தார்சாலை புதுப்பித்தல் | 10.00 | 28-08-09 இரண்டாம் அழைப்பு | தி/ள் ஸ்ரீ புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் (பி) லிமிடெட் | 4.93 அதிகம் |
| 5 | 6018/ 09 / எம்.டி.3 | கிழக்கு மண்டலம், வார்டு எண்.24 வள்ளியம்மாள் வீதி மற்றும் ராமசாமி நகருக்கு தார்சாலை புதுப்பித்தல் | 10.00 | 28-08-09 இரண்டாம் அழைப்பு | தி/ள் பி.மல்லையன் பில்டர்ஸ் | 4.74 அதிகம் |

<u>அலுவலகக்குறிப்பு-</u>

வரிசை எண்.1 லிருந்து 5 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டியிருப்பதாலும், மறுஒப்பந்தப்புள்ளி கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும் இப்பணிகள் அத்தியாவசிய அடிப்படை வசதிகள் உள்ளதாலும் மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 1940/09/எம்.டி.4

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 100 நாள் : 30.10.2009</u>

பொருளில் வரிசை எண். 1-ல் குறிப்பிடப்பட்டுள்ள சத்தியமூர்த்தி சாலை பூங்கா, வடக்கு மண்டலம், வார்டு எண். 31 என திருத்தம் செய்து பதிவு செய்யப்பட்டது. அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 5

கோவை மாநகராட்சி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்ப்புற புனரமைப்புத் திட்டத்தில் குடிசை மேம்பாட்டு திட்டத்தின் நிதியின்கீழ் நகர்புற ஏழை மக்களின் குடியிருப்பு பகுதிகளில் அடிப்படை கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வசதி பணிகளுக்கும் மற்றும் பொது நிதி பணிகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு கீழ்க்கண்டுள்ளவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன. இப்பணிகளுக்கு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளை, ஒப்பந்தப்புள்ளி திறனாய்வுக்குழு 01-09-2009 மற்றும் 26-09-2009 அன்று பரிசீலனை செய்து கீழ்க்கண்டவாறு பணிகளை ஏற்க பரிந்துரை செய்துள்ளது.

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | பொதுநிதி | | | | | |
| 1 | 11446/2008/ எம்.டி.2 | வார்டு எண்.19 பி.என். பாளையம் வேணுகோபால் லேஅவுட் பகுதியில் தார்தளம் அமைத்தல் | 5.40 | 24-07-2009 முதல் அழைப்பு | திரு.எம். துரைசாமி | 2.45% அதிகம் |
| | **BSUP Scheme Works** | | | | | |
| 2 | 1419/2009/ எம்.டி.2 | வார்டு எண்.17 பட்டாளம்மன் கோவில் வீதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் | 1.65 | 09-09-2009 நான்காம் அழைப்பு | திரு. எ. நாச்சிமுத்து | 4.89% அதிகம் |
| 3 | 1416/2009/ எம்.டி.2 | வார்டு எண்.66 தண்டல் ராமன் வீதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் | 1.80 | 09-09-2009 நான்காம் அழைப்பு | திரு.எ. சிக்கந்தர் ரஹீம் | 4.69% அதிகம் |
| 4 | 1420/2009/ எம்.டி.2 | வார்டு எண்.66 அய்யாவு வீதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் | 1.87 | 09-09-2009 நான்காம் அழைப்பு | திரு.எ. சிக்கந்தர் ரஹீம் | 4.89% அதிகம் |
| 5 | 1421/2009/ எம்.டி.2 | வார்டு எண்.72 மாணிக்க-வாசகர் நகர் பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் | 3.70 | 09-09-2009 நான்காம் அழைப்பு | திரு. எ. நாச்சிமுத்து | 4.66% அதிகம் |
| 6 | 1418/2009/ எம்.டி.2 | வார்டு எண்.70 அம்பேத்கார் வீதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதித்தல் | 1.15 | 09-09-2009 நான்காம் அழைப்பு | திரு. எ. நாச்சிமுத்து | 4.10% அதிகம் |
| 7 | 950/2009/ எம்.டி.2 | வார்டு எண்.62 அண்ணா நகர் பகுதியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் | 3.75 | 09-09-2009 நான்காம் அழைப்பு | தி/ள் பெல்லோ பவுண்டேசன்ஸ் | 0.44% அதிகம் |
| 8 | 944/2009/ எம்.டி.2 | வார்டு எண்.63 கே.கே.புதூர் மணியம் வேலப்பர் வீதியில் பாதாள சாக்கடை குழாய் பதித்தல் | 7.50 | 11-09-2009 நான்காம் அழைப்பு | திருமதி. எஸ். பார்வதி | 4.93% அதிகம் |

| வ. எண் | கோப்பு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ. இலட்சத்தில் | ஒப்பந்தப் புள்ளி நாள் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 9 | 971/2009/ எம்.டி.2 | வார்டு எண்.55 வேடப்பட்டி சாலை குடிசை பகுதி முகப்பு வளைவு பெயர் பலகை வசதி செய்தல் | 1.00 | 28-08-2009 மூன்றாம் அழைப்பு | திரு.ஆர். மயில்வாணன் | 4.80% அதிகம் |
| 10 | 976/2009/ எம்.டி.2 | வார்டு எண்.55 திரு.வி.க. நகர் சாலை குடிசை பகுதி முகப்பு வளைவு பெயர் பலகை வசதி செய்தல் | 2.00 | 28-08-2009 மூன்றாம் அழைப்பு | திரு.ஆர். மயில்வாணன் | 3.76% அதிகம் |
| 11 | 960/2009/ எம்.டி.2 | வார்டு எண்.55 தெலுங்கு-பாளையம் கலைஞர் நகர் குடிசை பகுதி முகப்பு வளைவு பெயர் பலகை வசதி செய்தல் | 1.00 | 28-08-2009 மூன்றாம் அழைப்பு | திரு.ஆர். மயில்வாணன் | 3.82% அதிகம் |

அலுவலக குறிப்பு - வரிசை எண்.1 முதல் 11 வரை உள்ள பணிகள் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் முடிக்க வேண்டி இருப்பதாலும், மறு ஒப்பந்தப்புள்ளிகள் கோரினால் இதைவிட குறைவான விலைப்புள்ளிகள் பெற வாய்ப்பு இல்லாத காரணத்தினாலும், இப்பணிகள் அடிப்படை அத்தியாவசிய பணிகளாக உள்ளதாலும், மதிப்பீட்டைக் காட்டிலும் கூடுதல் சதவீதம் பெறப்பட்ட பணிகளுக்கு பொறியியல் பணி விதிகளின்படி மாமன்றத்தின் அனுமதி பெற வேண்டியுள்ளதாலும் அனுமதிக்கலாம்.

ந.க.எண் 11446 / 08 / எம்.டி.2

மாநகர மன்ற தீர்மானம் எண் 101 நாள் : 30.10.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 6

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி செ. கிருபா ஆனந்தி, பல நோக்கு சுகாதார பணியாளர், ராஜ வீதி நகர் நல மையம் - ஈரோடு மாநகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, ராஜ வீதி நகர் நல மையத்தில் பல நோக்கு சுகாதாரப் பணியாளராக பணிபுரியும் திருமதி. செ. கிருபா ஆனந்தி அவர்கள், தனது கணவர் ஈரோடு மாவட்டத்தில் பணிபுரிவதாலும் மேலும் தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு ஈரோடு மாநகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி செ. கிருபா ஆனந்தி, பலநோக்கு சுகாதாரப் பணியாளரை ஈரோடு மாநகராட்சியில் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர், ஈரோடு மாநகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 7213/09/எம்.சி. 3

மாநகர மன்ற தீர்மானம் எண் 102 நாள் : 30.10.2009

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 7

பொருள் - பணியமைப்பு - கோவை மாநகராட்சி – திருமதி பி. சுதா, பல நோக்கு சுகாதார பணியாளர், தெலுங்குபாளையம் நகர் நல மையம் - கோவில்பட்டி நகராட்சிக்கு மாறுதல் கோருவது – தொடர்பாக.

----------

கோயம்புத்தூர் மாநகராட்சி, தெலுங்குபாளையம் நகர் நல மையத்தில் பல நோக்கு சுகாதாரப் பணியாளராக பணிபுரியும் திருமதி. பி. சுதா அவர்களுக்கு சொந்தஊர் கோவில்பட்டி என்பதாலும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாகவும் தனக்கு கோவில்பட்டி நகராட்சிக்கு பணிமாற்றம் செய்து தருமாறு விண்ணப்பித்துள்ளார்.

எனவே, திருமதி பி. சுதா, பலநோக்கு சுகாதாரப் பணியாளரை கோவில்பட்டி நகராட்சியில் பலநோக்கு சுகாதாரப் பணியாளர் பணியிடத்திற்கு ஒருவழி மாறுதல் செய்ய மன்ற அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு- அனுமதிக்கலாம். மாமன்ற அனுமதிக்குப் பின் மேற்படி தீர்மானத்தை ஆணையர்,கோவில்பட்டி நகராட்சி மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கும் அனுப்பி வைக்கலாம்.

ந.க.எண். 2366/09/எம்.சி. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 103 நாள் : 30.10.2009**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 8

பொருள் : வணிக வளாகம் - கோயமுத்தூர் மாநகராட்சி- கிழக்கு மண்டலம்-புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகம்-கடை எண்.3-உரிமக்காலம்-01.10.2006 முதல் 30.09.2009 உடன் முடிவடைய உள்ளது-தொடர்பாக.

------

கோவை மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட புலியகுளம் மாநகராட்சி வணிக வளாக கடை எண்.3-ஐ திரு. எம். குமாரசாமி, குத்தகைதாரருக்கு மாத உரிமக் கட்டணம் ரூ.1,898/- என்ற அடிப்படையில் மா.ம.தீ.எண்.146 நாள் 14.09.2006-ன்படி, மூன்றாண்டுகளுக்கு நீடிப்பு செய்யப்பட்ட கடையின் உரிமக்காலம் 30.09.2009 உடன் முடிவடைகிறது.

மாநகராட்சி குத்தகை விதிகளின்படி, கடையினை தொடர்ந்து நடத்த விருப்பம் இருப்பின் உரிமக்காலம் முடிவுறும் 60 தினங்களுக்கு முன்னர் உரிமக்காலம் நீட்டிப்பு செய்ய கோரியும், மாநகராட்சி நிர்ணயம் செய்யும் வாடகையை செலுத்த சம்மதம் தெரிவித்தும் குத்தகைதாரரால் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும்.

அதன்படி, குத்தகைதாரர் திரு.எம். குமாரசாமி என்பவர் தனது 17.07.2009-ம் தேதிய விண்ணப்பத்தில் உரிமக்காலம் மேலும் 3 ஆண்டுகளுக்கு நீட்டிப்பு செய்யக் கோரி விண்ணப்பம் செய்துள்ளார். மேலும் மேற்படி கடைக்கு செப்டம்பர் 2009 வரை உரிமக் கட்டணம் நிலுவையின்றி செலுத்தப்பட்டுள்ளது.

நகர்புற உள்ளாட்சி துறைகளுக்கு சொந்தமான கடைகள், நிலங்கள் ஆகியவற்றினை பொது ஏலத்தில் விடாமல் மேலும் மூன்றாண்டுகளுக்கு நீடித்தல் குறித்து அரசு ஆணை (ந.நி.ம.கு.வ.து.எண்.147 நாள் 30.12.2000, 20 ஆண்டுகள்) வெளியிடப்பட்டுள்ளது.

அதில் பத்தி எண்.4(3)-ல் மேலும் மூன்றாண்டுகளுக்கு அளிக்கப்படும் குத்தகை புதிய குத்தகையாக கருதப்பட்டு புதிதாக குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும்.

இப்புதிய குத்தகைத் தொகை அப்பகுதியில் நடைமுறையில் உள்ள வாடகை மதிப்பின் அடிப்படையில் (Market Rental Value) நிர்ணயிக்கப்பட வேண்டும். அவ்வாறு நிர்ணயம் செய்ய அப்பகுதியில் நகராட்சியால் கடந்த ஓராண்டில் ஏலத்தில் விடப்பட்ட கடைகளின் வாடகைத் தொகை, தனியார் கடைகளின் வாடகை அளவு, அரசு அல்லது அரசு சார்ந்த நிறுவனங்கள் தனியாரின் கட்டிடத்திற்கு அலுவலக வசதிக்கோ, பிற இனத்திற்கோ செலுத்தும் வாடகை அளவு போன்றவை அடிப்படையாக கொள்ளப்பட வேண்டும். இது போன்று கணக்கிடப்பட்ட வாடகை மதிப்பின் அடிப்படையில் ஒரு சதுர அளவுக்கான வாடகை நிர்ணயிக்கப்பட்டு அதன் அடிப்படையில் உள்ளாட்சி அமைப்புகளின் கடைக்கான புதிய குத்தகைத் தொகை நிர்ணயிக்கப்பட வேண்டும். எப்படியிருப்பினும், புதியதாக நிர்ணயிக்கப்படும் வாடகைத் தொகை சென்ற ஆண்டு வாடகையைவிட குறைந்தது 15% கூடுதலாக இருக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அரசாணையின்படி, மேற்படி வணிக வளாகப் பகுதியில் கடந்த ஓராண்டில் புதிதாக கடை ஏலம் எதுவும் விடப்படவில்லை. வரித்தண்டலர் தமது 30.07.2009-ம் தேதிய குறிப்பில் வார்டு எண்.22, புலியகுளம் பகுதியில் தனியார் கடைகளுக்கு வசூல் செய்யப்படும் வாடகை விபரம் கீழ்குறிப்பிட்டவாறு தெரிவித்துள்ளார்.

| <u>பங்கஜாமில் ரோடு, புலியகுளம்</u> | | | <u>மாத வாடகை</u> |
|---|---|---|---|
| 1. சிட்டி ஸ்டைல் புட்வேர் | 16 x 14 = 224 சதுரடி<br>1 சதுரடிக்கு ரூ.10.93 | - | ரூ. 2,450/- |
| 2. சரண்மா ஹார்டுவேர்ஸ் | 14 x 16 = 224 சதுரடி<br>1 சதுரடிக்கு ரூ.10.71 | - | ரூ. 2,400/- |

புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகக் கடைகளில் அதிகபட்சமாக கடை எண்.7-க்கு ரூ.2,798/-எனவும், குறைந்தபட்சமாக கடை எண். 5 மற்றும் 6-க்கு ரூ.1,286/- எனவும் உரிமக் கட்டணம் வசூல் செய்யப்பட்டு வருகிறது.

மேலும், மேற்படி வணிக வளாகம் அமைந்துள்ள பகுதியில் தனியார் கடைகளுக்கு அதிகப்பட்சமாக சதுரடிக்கு ரூ.10.93/- என மாத வாடகை வசூல் செய்யப்பட்டு வருவதாக வெளியிடப் பணியாளர் தனது 30.07.2009-ம் தேதிய குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அரசாணையில் குறிப்பிட்டுள்ளபடி, மேற்படி வணிக வளாக கடைகளில் கடந்த ஓராண்டில் புதிதாக ஏலம் ஏதும் விடப்படவில்லை. மேற்படி கடைக்கு சந்தை மதிப்பு அடிப்படையில் மாதாந்திர உரிமக் கட்டணம் ரூ.1,366/- எனவும், தற்போது பெறப்பட்டு வரும் மாதாந்திர வாடகை ரூ.1,898/-ல் குறைந்தபட்சம் 15% உயர்வு செய்யப்பட்டால் மாதாந்திர கட்டணம் ரூ.2,183/- என நிர்ணயம் செய்யப்பட வேண்டும்.

எனவே மேற்படி கடைக்கு சந்தை மதிப்பு அடிப்படையில் மாதாந்திர உரிமக் கட்டணம் நிர்ணயம் செய்யப்பட்டால், பெறப்படும் உரிமக் கட்டணத் தொகையைவிட தற்போதைய உரிமக் கட்டணத் தொகையில் குறைந்தபட்சமாக 15% உயர்வு செய்யப்பட்டால், பெறப்படும் உரிமக் கட்டணத் தொகை கூடுதலாக உள்ளதால், 15% உரிமக் கட்டணம் உயர்வு செய்து உரிமக்காலம் 01.10.2009 முதல் 30.09.2012 வரையிலான மேலும் மூன்றாண்டுகளுக்கு நீடிப்பு செய்ய வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தீர்மான எண். 10 தேதி 07.09.2009 தீர்மானத்தில் புலியகுளம் வணிக வளாகம் கடை எண். 3-க்கு உரிமக்காலம் 3 ஆண்டுகளுக்கு நீடிப்பு செய்தும் உரிமை கட்டணம் 15% உயர்வு செய்தும் அனுமதித்து தீர்மானித்துள்ளது. இதனை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண்.10099/2009/ கிஅ11

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 104 நாள் : 30.10.2009</u>

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள புலியகுளம் மாநகராட்சி வணிக வளாகம் கடை எண். 3ற்கு உயர்வு செய்து நிர்ணயம் செய்யப்பட்டுள்ள வாடகை உயர்வு, வெளிச்சந்தை வாடகை மதிப்போடு ஒப்பிடுகையில் மிகவும் குறைவாக இருப்பதனால், விரிவான ஆய்வு மேற்கொண்டு மீண்டும் மாமன்றத்திற்கு பொருள் வைத்து வாடகை உயர்வு செய்ய தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 9

பொருள் : குத்தகை-கோவை மாநகராட்சி-கிழக்கு மண்டலம்- வரதராஜபுரம் மாநகராட்சி திருமண மண்டபத்தினை பராமரித்து நடத்திக் கொள்ளும் உரிமம்-மூன்றாண்டுகளுக்கு திரு எம். ரகு என்பவருக்கு ஒப்படைவு செய்யப்பட்டது-வருகின்ற 19.11.2009 உடன் முடிவடைய உள்ளது-சம்பந்தமாக.

----------

கோயம்புத்தூா் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட வரதராஜபுரம் மாநகராட்சி திருமண மண்டபத்தினை பராமரித்து நடத்திக் கொள்ளும் உரிமம், மாமன்ற தீா்மான எண். 104 நாள் 14.09.2006-ன்படி, ஒப்படைவு செய்யும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, 20.11.2006 முதல் 19.11.2009 வரையிலான மூன்றாண்டுகளுக்கு திரு எம். ரகு என்பவருக்கு ஒப்படைவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி மண்டபத்தில் உரிமக்காலம் 19.11.2009 உடன் முடிவடைய உள்ளதால், திரு எம். கிருஷ்ணமூா்த்தி, மாமன்ற உறுப்பினா் அவா்களின் 20.06.2009-ம் தேதிய விண்ணப்பத்தில் தனியாருக்கு குத்தகைக்கு விடுவதனால் சரியான பராமரிப்பு செய்யப்படாமல் உள்ளது என்றும், மாநகராட்சிக்குட்பட்ட ஒரு சில திருமண மண்டபங்களை மாநகராட்சி மூலமே திருமணம் மற்றும் பொது நிகழ்ச்சிகளுக்கு கொடுத்து நடத்தி வருவது போல, வரதராஜபுரம் மாநகராட்சி திருமண மண்டபத்தையும் மாநகராட்சி மூலமே நடத்த கேட்டுள்ளதை வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் வைக்கப்பட்டது.

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு தனது 07.09.2009ம் தேதிய தீா்மான எண். 11-ல் வரதராஜபுரம் மாநகராட்சி திருமண மண்டபத்தின் பழைய உரிமையினை நீக்கம் செய்தும், மாநகராட்சியே தொடா்ந்து நடத்தவும் அனுமதித்து தீா்மானித்துள்ளது. இதனை மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u> - ஒப்புதல் வழங்கலாம். ந.க. எண். 1694/2006/ கிஅ.7

### <u>மாநகர மன்ற தீா்மானம் எண் 105 நாள் : 30.10.2009</u>

வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீா்மானம் எண். 11 நாள் 07.09.2009 ஐ ஏற்று அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 10

கோயம்புத்தூா் மாநகராட்சி, கிழக்கு மண்டலம், வாா்டு எண் 26-க்குட்பட்ட ரேஸ்கோா்ஸ் பகுதியில் உள்ள காமராஜா் சாலை, இந்திய விமானப்படை நிா்வாக கல்லூரியின் முன்புறம், மாநகராட்சி சாலையை கடந்து எதிா்புறம் உள்ள மருத்துவமனை வளாகத்திற்கு செல்லவும் மற்றும் பொதுமக்களும் பயன்படுத்தும் விதமாக, நடைபாதை மேம்பாலம் இந்திய விமானப்படை கல்லூரி நிா்வாகத்தின் செலவில் அமைக்க உத்தேசித்து, மாநகராட்சிக்கு சொந்தமான சாலையில் பணி மேற்கொள்ள இந்திய விமானப்படை நிா்வாக கல்லூரியினா் அனுமதி கோரியுள்ளனா்.

உத்தேச நடைபாதை மேம்பாலம் கல்லூரி வளாகத்திற்கும், மருத்துவமனை வளாகத்திற்கும் இடையே இணைப்பு பாலமாக அமைகிறது. காமராஜா் சாலையில் போக்குவரத்து அதிகமாக இருப்பதாலும் பொதுமக்களின் நலன்கருதியும், கல்லூரியின் நலன் கருதியும் நடைபாதை மேம்பாலம் அமைக்க மாநகராட்சிக்கு சொந்தமான சாலையை நிபந்தனைகளுக்குட்பட்டும் பொதுப்பணித் துறையின் பயணியா் மாளிகை அருகில் இருப்பதால், பொதுப்பணித்துறை மற்றும் காவல்துறையின் ஒப்புதல் பெற்ற பின்னா் பயன்படுத்திக்கொள்ள அனுமதி வழங்க மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் சமா்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம். ந.கஎண் 10910/09/ED2

### <u>மாநகர மன்ற தீா்மானம் எண் 106 நாள் : 30.10.2009</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீா்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயா்
கோயம்புத்தூா் மாநகராட்சி

---

## பொருள் எண் 11

பொருள்: கோவை மாநகராட்சி – தெற்கு மண்டலம் – போத்தனூர் ரோடு லாரிப்பேட்டை (உக்கடம்) மீன் மார்க்கெட்டினை தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்திற்கு நீண்டகால குத்தகைக்கு ஒதுக்கீடு செய்ய அனுமதி வேண்டுவது – தொடர்பாக.

--------

கோவை மாநகராட்சி தெற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண்.54ல் உள்ள குத்தகை இனமான போத்தனூர் ரோடு லாரிபேட்டையில் உள்ள மொத்த மீன் வியாபார மார்க்கெட்டினை உலக சுகாதாரத் தரத்திற்கு உயர்த்தி மீன் விற்பனை செய்வதற்காக மேலாளர், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், ஆழியார் அலகு அவர்களால் மேற்படி மார்க்கெட்டினை நீண்ட கால குத்தகை அடிப்படையில் மேற்படி துறைக்கு வாடகை அடிப்படையில் ஒதுக்கீடு செய்ய கேட்டுக் கொண்டதன் அடிப்படையில் இப்பொருள் தொடர்பாக மாமன்றத்தின் தீர்மான எண்.361, நாள் 19.02.2009 மூலம் மேற்குறிப்பிட்டுள்ள இடத்தினை மீன் வளத்துறைக்கு ஒதுக்கவும் வாடகை நிர்ணயம் செய்யவும், காலக் கெடு நிர்ணயிக்கவும் அரசுக்கு பிரேரணை அனுப்பலாம் என்ற மன்றத் தீர்மானத்தின்படி அரசுக்கு 25.02.2009ல் கடிதம் அனுப்பப்பட்டது.

மாமன்ற தீர்மானத்தினை தொடர்ந்து அரசின் உரிய ஆணை பெற்றிட 25.02.09ல் நகராட்சி நிர்வாக ஆணையர் வாயிலாக மாநகராட்சியிலிருந்து கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பேரில் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் இப்பொருள் குறித்து விரிவான அறிக்கை வழங்க கோரியிருந்தார். பின்னர் இந்த உக்கடம் மொத்த மீன் வியாபார மார்க்கெட்டின் நிலப்பரப்பினை காலியிடமாக கருதி நிலவாடகை பொதுப் பணித்துறை மதிப்பீட்டின் அடிப்படையில் வாடகை சதுரடிக்கு ரூ.5/– வீதம் 73181 சதுரடிக்கு வருட வாடகையாக ரூ.40,98,132/– என தெரிவிக்கப்பட்டது.

பொதுப் பணித்துறை வாடகை அடிப்படையில் மதிப்பிடப்பட்ட வாடகைத் தொகை அதிகமாக உள்ளதாலும், இந்த தொகை மாநகராட்சி மூலம் தற்போது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள ஏலத் தொகையினை காட்டிலும் பன்மடங்கு அதிகமாக உள்ளதால் மீன் வளர்ச்சிக் கழகம் சார்பில் ரூ.1.96 கோடி மதிப்பில் கட்டிடங்கள் மற்றும் அபிவிருத்தி பணிகள் செய்யப்பட உள்ளதால் மாநகராட்சி மூலம் தற்போது குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள தொகையினையே இவர்கள் செலுத்த தயாராக உள்ளதாகவும், மேலும் அடுத்துவரும் காலங்களில் ஆண்டுக்கு 10% கூடுதலாக குத்தகை செலுத்த தயாராக உள்ளதாக தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்தின் மேலாண்மை இயக்குநர் தனது 20.08.2009ம் கடிதத்தில் தெரிவித்திருந்தார்கள்.

தற்போது இந்த உக்கடம் மொத்த மீன் விற்பனை மையம் ஆண்டு குத்தகை அடிப்படையில் தனியாருக்கு மாநகராட்சி மூலம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகள் பெறப்பட்டுள்ள குத்தகை கட்டணம் பின்வருமாறு.

1) 2005 – 06 ரூ. 2.00 லட்சம்
2) 2006 – 07 ரூ. 3.00 லட்சம்
3) 2007 – 08 ரூ. 2.55 லட்சம்
4) 2008 – 09 ரூ. 1.70 லட்சம்
5) 2009 – 10 ரூ. 2.79 லட்சம்

கடந்த 5 ஆண்டுகளின் சராசரி வருட குத்தகை மதிப்பினை கருத்தில் கொண்டு முதல் வருடத்திற்கு ரூ.3.00 லட்சமாகவும், அடுத்து வரும் வருடங்களுக்கு 10% கூடுதலாக குத்தகை பெற்று 20 வருட நீண்ட கால குத்தகைக்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்திற்கு வழங்கிட அரசு ஆணை வழங்கிட நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், அரசுக்கு செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். இப்பொருள் குறித்து மாமன்றத்தின் விரிவான பொருள் வைத்து அனுமதி பெற்றிடுமாறு நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர் அவர்கள் தனது 07.10.2009 கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

எனவே, மேற்படி மாநகராட்சிக்கு சொந்தமான போத்தனூர் ரோடு, லாரி பேட்டை மொத்த வியாபார மீன் மார்க்கெட்டினை உலக சுகாதார தரத்திற்கு உயர்த்தி மீன் விற்பனை செய்வதற்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகம், ஆழியார் அலகு துறைக்கு வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் (Design, Build, Operate and Transfer basis) அடிப்படையில் 20 ஆண்டு காலத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் வருடம் ஒன்றுக்கு ரூ.3.00 லட்சம் வாடகையாக நிர்ணயம் செய்யவும், இத்தொகையினை ஒவ்வொரு ஆண்டுக்கும் 10% வாடகை உயர்த்தப்படும் என்கின்ற நிபந்தனைக்குட்பட்டு அரசின் அனுமதி பெற்று ஒதுக்கீடு செய்வதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

அலுவலக குறிப்பு: அரசின் பரிந்துரைக்கு அனுப்பலாம். ந.க.எண்.1322/2009/அ1

<u>**மாநகர மன்ற தீர்மானம் எண் 107 நாள் : 30.10.2009**</u>

**1. மாநகராட்சிக்குச் சொந்தமான போத்தனூர் ரோடு லாரிப்பேட்டை மொத்த வியாபார மீன் மார்க்கெட்டினை நீண்டகால குத்தகை அடிப்படையில் 20 ஆண்டுகளுக்கு தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழகத்திற்கு வடிவமைத்தல், கட்டுதல், இயக்குதல் மற்றும் மாற்றுதல் ( Design, Build, operate and Transfer (DBOT) ) அடிப்படையில் வழங்க அரசிற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.**

**2. முதலாம் ஆண்டிற்கு வாடகையாக ரூ. 3.00 லட்சம் (ரூபாய் மூன்று லட்சம் மட்டும்) நிர்ணயம் செய்யவும், அடுத்துவரும் ஒவ்வொரு ஆண்டிற்கும், அதற்கு முந்தைய ஆண்டின் வாடகை மதிப்பில் 10% உயர்வு செய்து வாடகையாக நிர்ணயம் செய்யவும் அரசிற்கு பரிந்துரை செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.**

**(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்**
**மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

---

## பொருள் எண் 12

**கோயம்புத்தூர் மாநகராட்சி எல்லைக்குட்பட்டதும், வார்டு எண்கள்.2,3,4,5,6, 7,8,9,67,68 மற்றும் 69-க்குட்பட்டதும் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்குறிப்பிட்டுள்ள சாலையின் நடுவில் செல்லும் இரயில்வே கடவுகளை நாள்தோறும் கடந்து செல்லும் இரயில்களால் மூடப்பட்டு திறக்கும்வரையில் பொதுமக்களுக்கு மிகுந்த சிரமம் ஏற்படுவதாலும், இதனால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதாலும், இரயில்வே கடவுகளுக்கு பதிலாக இரயில்வே மேம்பாலங்கள் கட்டுவதற்கு உரிய நிதி ஒதுக்கி செயல்படுத்தவோ அல்லது இரயில்வே கடவுகள் உள்ள மாநகராட்சி சாலைகளை, நெடுஞ்சாலை துறைக்கு ஒப்படைத்தால் பணியினை மேற்கொள்ள ஏதுவாக இருக்குமென கோட்ட பொறியாளர் அவர்களிடமிருந்து 29-09-2009 கடிதம் வரப்பட்டுள்ளது. அவையாவன :-**

| | |
|---|---|
| **1. தண்ணீர்பந்தல் ரோடு (விளாங்குறிச்சி ரோடு S.Bend முதல் அவினாசி ரோடு வரை) (இரயில்வே கடவு எண்.6)** | **- 1140 மீ** |
| **2. திருச்சி சாலை முதல் நீலிக்கோணாம்பாளையம் சாலை, நீலியம்மன் கோவில் வரை (இரயில்வே கடவு எண்.5)** | **- 1602 மீ** |
| **3. விளாங்குறிச்சி சாலை (இரயில்வே கடவு எண்.8) அவினாசி சாலை முதல் விளாங்குறிச்சி ரோடு S.Bend வரை** | **- 1668 மீ** |
| **4. இரத்தினபுரி சங்கனூர் சாலை (இரயில்வே கடவு எண்.11) (சங்கனூர் பள்ளம் முதல் சங்கனூர் மெயின் ரோடு வரை)** | **- 1050 மீ** |
| **5. காந்திஜி சாலை (இரயில்வே கடவு எண்.13) (சங்கனூர் பள்ளம் முதல் கண்ணப்ப நகர் வரை)** | **- 895 மீ** |
| **6. சிங்காநல்லூர் வெள்ளலூர் சாலை (இரயில்வே கடவு எண்.46 (திருச்சி சாலை முதல் நொய்யல் வரை)** | **- 1880 மீ** |
| **7. இருகூர் சாலை (இரயில்வே கடவு எண்.2) (திருச்சி சாலை முதல் இருகூர் செல்லும் சாலை, மாநகராட்சி எல்லை வரை)** | **- 1980 மீ** |

**இரயில்வே மேம்பாலம் அமைக்கப்படுவதற்குண்டான, மேம்பால இருபுறங்களிலும் நில ஆர்ஜிதம் செய்து இணைப்பு சாலைகள் அமைக்க வேண்டியுள்ளதாலும், சாலை மேம்பாலங்கள் கட்டப்படவுள்ள சாலைகள் அனைத்தும் கோவை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ளதாலும், மேம்பால திட்டப்பணிகளை செயல்படுத்த தேவையான நில ஆர்ஜிதம் பணிகள் மேற்கொள்ள ஏதுவாக கோவை மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள மேற்காணும் சாலைகளை உரிய அளவுகளுடன் நெடுஞ்சாலைத்துறைக்கு ஒப்படைப்பு செய்தால் மட்டுமே நெடுஞ்சாலை துறை இப்பணியினை மேற்கொள்ளும் என தெரிவித்து இருப்பதால் மேற்குறிப்பிட்ட சாலைகளை மாநில நெடுஞ்சாலை துறைக்கு ஒப்படைப்பு செய்வது குறித்து மாமன்றம் முடிவு செய்ய மாமன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.**

அலுவலகக் குறிப்பு -

மேற்குறிப்பிட்டுள்ள 7 (ஏழு) சாலைகளில் இரயில்வே மேம்பாலங்கள் இரயில்வே கடவுகளுக்கு பதிலாக அமைக்கவும், இணைப்பு சாலைகளுக்கு நில ஆர்ஜிதம் செய்ய உரிய நிதி செலவழிக்கவும் அதிகப்படியான நிதி தேவைப்படுவதால் மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளை உரிய அளவுகள் உடன் நெடுஞ்சாலை துறைக்கு ஒப்படைப்பு செய்து பணியினை மேற்கொள்ள மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ந.க.எண். 41101/2006/எம்.டி. 3

**மாநகர மன்ற தீர்மானம் எண் 108 நாள் : 30.10.2009**

பொருளில் குறிப்பிடப்பட்டுள்ள 7 சாலைகளில் உள்ள இரயில்வே கடவுகளுக்குப் பதிலாக இரயில்வே மேம்பாலங்கள் அமைக்க மாநகராட்சி கட்டுப்பாட்டில் உள்ள சாலைகளை நெடுஞ்சாலைத் துறைக்கு ஒப்படைப்பு செய்ய அரசிற்கு பரிந்துரை செய்ய தீர்மானிக்கப்பட்டது.

மேலும், மேற்படி பாலங்களில் குடிநீர் குழாய்கள், மின் கேபிள்கள், பாதாள சாக்கடைக் குழாய்கள், மழைநீர் சாக்கடை முதலிய அடிப்படை வசதிகளை மாநகராட்சி மேற்கொள்ள ஏதுவான வகையில் Utility duct அமைத்துத்தர நெடுஞ்சாலைத் துறையினரைக் கோரவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

பொருள் எண் 13

கோயமுத்தூர் மாநகராட்சி மேற்கு மண்டலம் வார்டு எண். 48ல் ரங்கே கவுடர் சாலையில் புதிதாக மலர் அங்காடி கட்டுவதற்கான பணி மதிப்பீடு ரூ.80.15 இலட்சங்களுக்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை கடித எண். 35696/04/MCBI/, நாள்: 10.09.2004ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டது. ஒப்பந்தப்புள்ளிகள் இருமுறை கோரியும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்படாததால் மதிப்பீடு 2007–2008.ம் ஆண்டு விலை விபரப்பட்டியல்படி தயாரிக்கப்பட்டு திருத்திய தொழில்நுட்ப அனுமதி ரூ.113.44 இலட்சங்களுக்கு கடந்த 19.04.2007ல் பெறப்பட்டு மூன்றாவது முறையாக கடந்த 06.06.2007ல் ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்கப்பட்டது. மூன்றாவது முறை ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியும் மதிப்பீட்டினை விட 4.81 % சதவீதம் அதிகமாக வழங்கிய ஒப்பந்ததாரர் திருவாளர்கள் புவனா கன்ஸ்ட்ரக்சன்ஸ் கோவை என்ற நிறுவனத்திடம் ஒப்பந்த மதிப்பு ரூ.114.94 இலட்சங்களுக்கு பணி ஒப்படைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

நிர்வாக அனுமதி பெறப்பட்ட தொகையையும், திருத்திய மதிப்பீட்டின் பேரில் பெறப்பட்ட ஒப்பந்த விகிதப்புள்ளியின் மதிப்பையும் கருத்தில் கொண்டு ரூ.113.44 இலட்சங்களுக்கு திருத்திய நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர்–சென்னை அவர்களுக்கு இவ்வலுவலக ந.க.எண்.5409/2004/MD 3, நாள் 26.03.2008ல் பிரேரணைகள் அனுப்பப்பட்டது. இந்நிலையில் நகராட்சி நிர்வாக இயக்குனர், மற்றும் தலைமைப் பொறியாளர் தங்களது 3.10.2009ம் தேதி ஆய்வின் போது கட்டப்பட்டு வரும் புதியமலர் அங்காடி பணியில் கீழ் குறிப்பிட்டுள்ள பணிகள் மேற்கொள்ளாமல் உள்ளதால் இப்பணிகள் தவிர்த்து மொத்த ஒப்பந்த மதிப்பில் ரூ.98.43 இலட்சம் மட்டுமே செலவழிக்கப்படவுள்ளதாலும், கீழ் குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு தனி நடவடிக்கை எடுத்து மேற்கொள்ளும்படி அறிவுறுத்தி மேற்படி செலவின தொகைக்கான நிர்வாக அனுமதியினை அரசாணை எண்.18 நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்குத் துறை நாள் 16.02.09ன் படி மாமன்றமே வழங்கலாம் என தெரிவித்து நகராட்சி நிர்வாக இயக்குனர்–சென்னை அவர்கள் தனது ந.க.எண்.18524/2008/ MCA 3, நாள் 21.10.2009 ல் அறிவுறுத்தி உள்ளார்.

புதிய மலர் அங்காடி பணியில் மேற்கொள்ளப்படாத பணிகள்

| | | |
|---|---|---|
| 1) | கீழ்நிலைத் தொட்டி | ரூ. 2.75 இலட்சங்கள் |
| 2) | வடிகால் மற்றும் சிறுபாலம் | ரூ. 6.10 இலட்சங்கள் |
| 3) | மழைநீர் சேகரிப்பு | ரூ. 0.90 இலட்சம் |
| 4) | சிமெண்ட் கான்கிரீட் வடிகால் | ரூ. 2.48 இலட்சங்கள் |
| 5) | D.S.M. செலவுகள் | ரூ. 2.78 இலட்சங்கள் |
| | மொத்தம் | ரூ. 15.01 இலட்சங்கள் |

**எனவே தொழில்நுட்ப அனுமதி அளிக்கப்பட்ட தொகை ரூ.113.44 இலட்சத்தில் மேற்குறிப்பிட்ட இனங்களின் மொத்த மதிப்பீடு தொகை ரூ.15.01 இலட்சங்கள் போக மீதமுள்ள தொகையான ரூ.98.43 இலட்சங்களுக்கு நிர்வாக அனுமதி வழங்கவும், மேற்குறிப்பிட்ட பணிகளை தனி நடவடிக்கை எடுத்து மேற்கொள்ளவும், மாமன்றத்தின் ஒப்புதல் வேண்டி பொருள் வைக்கப்படுகிறது.**

**அலுவலகக்குறிப்பு:**

1) **புதிய மலர் அங்காடி கட்டுமான பணிக்கான தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டு தொகையில் மேற்க்கொள்ளாமல் உள்ள பணிகள் தவிர்த்து செலவழிக்கப்படவுள்ள ரூ.98.43 இலட்சத்தில் இப்பணியினை நிறைவேற்ற மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.**

2) **புதிய மலர் அங்காடியில் மேற்கொள்ளப்பட வேண்டிய கூடுதல் பணிகளுக்கு தனி நடவடிக்கை எடுக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.**

**ந.க.எண். 5409 / 2004 / MD 3**

**மாநகர மன்ற தீர்மானம் எண் 109 நாள் : 30.10.2009**

1) புதிய மலர் அங்காடி கட்டுமான பணிக்கான தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீட்டு தொகையில் மேற்கொள்ளாமல் உள்ள பணிகள் தவிர்த்து செலவழிக்கப்படவுள்ள ரூ. 98.43 இலட்சத்தில் இப்பணியினை நிறைவேற்ற மாமன்றம் நிர்வாக அனுமதி வழங்க தீர்மானிக்கப்பட்டது.

2) புதிய மலர் அங்காடியில் மேற்கொள்ளப்படவேண்டிய கூடுதல் பணிகளுக்கு தனி நடவடிக்கை எடுக்க மாமன்றம் ஒப்புதல் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

**பொருள் எண் 14**

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – வார்டு எண் 54 - தெற்கு உக்கடம் - பாலக்காடு சாலையில் உள்ள லாரிப்பேட்டையினை வெள்ளலூரில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தின் ஒரு பகுதியில், 5 ஏக்கர் நிலப்பரப்பில் இடம் மாற்றம் செய்வது – தொடர்பாக.

-------------

கோயம்புத்தூர் மாநகராட்சி வார்டு எண் 54 தெற்கு உக்கடம் பகுதி, பாலக்காடு சாலையில் உள்ள லாரிப்பேட்டை, போக்குவரத்து அதிகம் பாதிக்கும் வகையில் உள்ளதாலும், கோயம்புத்தூர் மாநகராட்சியின் பிரதான சாலையாக பாலக்காடு சாலை உள்ளதாலும், லாரிப்பேட்டை அமைந்துள்ள பகுதியில் அடிக்கடி விபத்துகள் ஏற்படுவதாலும், இதனை விரிவுபடுத்தி நவீன வசதிகளுடன் கோயம்புத்தூர் மாநகராட்சிக்குச் சொந்தமான வெள்ளலூர் பகுதியில் சுமார் 5 ஏக்கர் பரப்பளவு உள்ள இடத்தில் அமைக்க ஒப்புதல் வழங்க மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - ஒப்புதல் வழங்கலாம். ந.க.எண். 9608/2009/ எச் 1 (தெ)

**மாநகர மன்ற தீர்மானம் எண் 110 நாள் : 30.10.2009**

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

## பொருள் எண் 15

கோயம்புத்தூர் மாநகராட்சியின் நான்கு மண்டலங்களில் அயற்பணி அடிப்படையில் தற்போது பணியாற்றி வரும் புல உதவியாளர்கள் (1).திரு.வி,என்.ரங்கசாமி (தெற்கு மண்டலம்), (2). ஆர்.செல்வராஜ் (தெற்கு மண்டலம்) (3). எஸ்.எல்.முருகேசன் (வடக்கு மண்டலம்) மற்றும். (4) ஆர்.ரவி (மேற்கு மண்டலம்) ஆகியவர்களது அயற்பணிக்காலம் கடந்த 31.08.09-ம் தேதியுடன் முதலாம் ஆண்டு முடிவடைந்துள்ள நிலையில், இரண்டாம் ஆண்டிற்கான பணி நீட்சி பிரேரனையை, சென்னை நில அளவை மற்றும் நிலவரி திட்டம் முதன்மை ஆணையர் மற்றும் இயக்குநருக்கு அனுப்பி வைக்க கோவை மாவட்ட நில அளவை உதவி இயக்குநர், கோவை-18. அவர்களால் கடிதம் எண். ந.க.எண்.அ1/5665/09/ நாள் 16.09.09-ன் மூலம் கோரப்பட்டுள்ளது.

எனவே மேற்குறித்த நகர அளவை பணியினை சார்ந்த புல உதவியாளர்கள் (1). திரு.வி.என்.ரங்கசாமி (தெற்கு மண்டலம்) (2). திரு.ஆர். செல்வராஜ் (தெற்கு மண்டலம்), (3).திரு.எஸ்.எல்.முருகேசன் (வடக்கு மண்டலம்) மற்றும் (4).திரு.ஆர்.ரவி.(மேற்கு மண்டலம்) ஆகியவர்களின் அயற்பணிக்காலம் அளவினை 2-ம் ஆண்டுக்கு நீட்டிப்பு செய்ய ஒப்புதல் வழங்கலாம் என தெரிவித்தும் இதற்கான ஒப்புதல் கடிதம் சென்னை நில அளவை மற்றும் நிலவரி திட்டம் முதன்மை ஆணையர் மற்றும் உதவி இயக்குநர் அவர்களுக்கு அனுப்புவது குறித்தும் மாமன்றம் ஒப்புதல் வேண்டி பொருள் சமர்ப்பிக்கபடுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u> - ஒப்புதல் வழங்கலாம் ந.க.எண்.11242/09/எம்.எச்.5

<u>மாநகர மன்ற தீர்மானம் எண் 111 நாள் : 30.10.2009</u>

அலுவலகக் குறிப்பு ஒப்புதல் வழங்கலாம் என தீர்மானிக்கப்பட்டது.

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி

---

(ஒப்பம்) ஆர். வெங்கடாசலம்
மேயர்
கோயம்புத்தூர் மாநகராட்சி